உ

ஓம் தத்ஸத்.

வன்னியகுல விளக்கம்.

இது

திருவண்ணமலை

வன்னியகுல க்ஷத்திரிய வல்லாளராஜன் மடம்

அல்லது வன்னியர் மடம்.

அகில வன்னியகுல குருபீடம்.

ஸ்ரீலஸ்ரீ,

சி. சுப்பைய சுவாமி என்னும்

சி. ஷண்முகானந்தகிரி சுவாமிகளால்

இயற்றப்பட்டு

இராயவேலூர் விக்டோரியா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

7-12-1923. [விலை 0-0-6.

முகவுரை.

வேதத்தின் விதிகளுக்குக் கட்டுப்பட்டு சகல புருஷார்த்தங்களையும் அடைந்து வரும் சேரநாட்டிலே தமிழ்த் தேசத்திலே திருவண்ணாமலையென்னுந் திவ்வியக்ஷேத்திரத்திலே கலியுகம் 5025-க்கு உருத்திரோத்காரி வரு ஐப்பிசிமீ 1வ வல்லாளராஜன் மடாலயத்திலே அகில வன்னியகுல க்ஷத்திரிய மகாஜனங்களின் மகாநாடுகூடி அகில வன்னியகுல குருபீடம் ஒன்றை ஸ்தாபித்து அதில் ஸ்ரீ. ஜகத்குரு சங்கர பகவத் பாதபூஜ்ய தோடகாசார்ய பரம்பராயோகானந்தகிரி கரகமலஸம்ஜாத ஸ்ரீமது சி. ஷண்முகானந்தகிரி சுவாமிகளைக் குருவாக நியமித்து அப்போது வன்னியகுலச் சட்டதிட்டப் புத்தகமுந் தீர்மானிக்கப்பட்டது. அதனால் அந்தச் சுவாமிகள் இந்த வன்னியகுல விளக்கம்; என்ற நூலினை வெளியிட்டார்கள். இதில் வன்னியகுல முண்டென்றும், அக்குலத்தவர் அரசராகவிருந்தனரென்றும், இப்போதும் அவ்வரச பரம்பரையுண்டென்றும், கூறி, அவர்களுக்கு வேதம், சாகை, குலம், கோத்திரம், சூத்திரம், பிரவரம், முதலியனவுங் கூறப்பட்டிருக்கின்றன. ஆகையால் படித்தவரேனும் மற்றவரேனும் ஒவ்வொரு வன்னியகுல க்ஷத்திரியர்களின் கையிலும் இந்நூல் விளங்குவதவசியமாகின்றது.

இங்ஙனம்,

சி. மௌ. செ. முத்தையசுவாமி.

ஓம் தத்ஸத்.

பரப்ரஹ்மணே நம:

வன்னியகுல விளக்கம்.

மனிதரனைவரும் ஒருதுன்பமுமின்றி யென்றுமின்பமாயிருக்க நினைக்கின்றனர். அவ்வின்பம் மோக்ஷமாம். அம்மோக்ஷம் ஞானத்தாலாகும். அந்த ஞானம் தன்னை யுணர்ந்த தலைவனுபதேசத்தாலாகும். அவ்வுபதேசம் சாதனமுடையார்க்காகும். அச்சாதனம் தந்தஞ் ஜாதி கருமத்தைச் சதாசெய்து அதனலாகும் புண்ணியத்தைச் சங்கரனுக்குச் சமர்ப்பிப்பதினலாகும்.

ஆகையால் வன்னியரது குலமான ஜாதியுந் தொழிலுங் கூறப்படுகின்றன. அக்கினிகுலம், சூரியகுலம், சந்திரகுலம் என்னும் முக்குலங்களின் வழிவந்த க்ஷத்திரியர்களே அரசராக விளங்கினவர்கள். அவற்றுள் அக்கினி குலத்திலுதித்த க்ஷத்திரிய மரபினர்களே இக்காலத்தில் பள்ளிகள், படையாக்ஷிகள் என்போர்களாம்.

அக்கினிகுலமுண்டென்பதற்குப் பிரமாணம்:—மகாபாரதம் அனுசாசனபர்வம் 85-வது அத்தியாயம் 104-வது சுலோகத்தின் பொருள். வருணனற் செய்யப்பட்ட யாகத்திலிருந்து தமது குணங்களோடு சரீரமுடையவர்களாய் மூன்று புருஷர்களுண்டானர்கள். 105-வது சு—ள். அந்த மூவரிலொருவரான பிருகு வென்பவர் அந்த அக்கினியின் பூத்காரத்திலிருந்துண்டானமையால் பிருகு என்றழைக்கப்

பட்டார். அந்த அக்கினியின் அங்கத்திலிருந்து அங்கிரஸ் என்பவருண்டானார். அடியிலிருந்து கவியென்பவருண்டானார் 124-வது சு—ள். சூரியனுக்கொப்பான பிரகாசமுடைய பிருகுவை சமுத்திராதிபதியான வருணன் புத்திரனாகக் கொண்டான் 125-வது சு—ள். அப்போது மகாதேவர் அங்கிரசை அக்கினிக்குப் புத்திரனாகவாக்கினார். பிரமதேவர் தத்துவ வித்தான கவியைப் புத்திரனாகக் கொண்டார் 126-வது சு—ள். பிருகுவின் வமிசத்தவர்கள் வாருணர்கள் எனப்படுகின்றனர். அங்கிரஸ் அக்கினிக்குப் புத்திரனாக ஆனமையால் அங்கிரஸ் வமிசத்தவர்கள் ஆக்னேயர் அல்லது அக்கினிகுலத்தையுடையவர்கள் அதாவது வன்னியர் எனப்படுகின்றனர். கீர்த்தியுடைய கவியின் வமிசத்தவர் பிராம்யர் எனப்படுகின்றனர். 129-வது சு—ள். அக்கினியின் புத்திரரான அங்கிரசுக்குப் பிருகஸ்பதி, உதத்யன், பயஸ்யன், சாந்தி, தீரன், விரூபன், ஸம்வர்த்தன், சுதன்வன், என்று எட்டுப் புத்திரருண்டானார்கள் 137-வது சு—ள் பிரகாசமுடைய அக்கினிதேவன் அங்கிரசைப் புத்திரனாகக்கொண்டான்; ஆகையால் அங்கிரஸ் வழிவந்தவரெல்லாம் ஆக்னேயர் அதாவது வன்னியர் எனப்படுகின்றனர். ஆரண்ய பருவம் 222-வது அத்தியாயம் 1வது சு—ள். ஓ பாபமற்ற குருவமிசத்தில் உதித்தவனே! உனக்கிதுகாறும் அக்கினியின் பலவிதமான வமிசங்களை விரிவாகக் கூறிவந்தேன் இனி கார்த்திகேயன் சரித்திரத்தைக் கேட்பாயாக. என்றும் சாந்திபருவம் 296-வது அத்தியாயம் 17-வது சு—ள். பூர்வத்திலே அங்கிரஸ் (அக்கினி புத்திரன்) கஸ்யபர், வசிஷ்டர், பிருகு என்ற நான்குமூல கோத்திரங்களே, இருந்தன. பின்கருமத்தால் பற்பல கோத்திரங்களுண்டாயின என்றும், பாகவதம் 8-வது

ஸ்கந்தம் 1-வது அத்தியாயம் 20-வது சு—ள். அக்கினியின் புத்திரனுன, இரண்டாவது மனுவாகிய, சுவாரோசிஷ மனுவிற்கு, சுத்யும்னன், சுஷேணன், ரோசிஷ்மன் என்பவர் பிள்ளைகளாம். என்றுங் கூறப்பட்டிருக்கின்றது. இதுவுமன்றி ஆக்னேய புராணத்தில் தேவிமகாத்மியத்தில் விரிவாகக் கூறுமிடத்திலும், பிரம்மாண்ட புராணம், இராமாயணம், ஹரிவமிசம், ஆழ்வார் நாயன்மார் முதலியவர்களின் வசனங்கள் இவற்றிலும், சிலெ யெழுபது, திருக்கை வளம், இவற்றிலும், அந்தந்த வரசர்கள் காலங்களில் ஏற்பட்டுத்தற்போது ஆங்கிலேய அரசாங்கத்தார் அச்சிட்ட தாம்பிரம் சில இந்தச் சாசனங்களிலும், வன்னியகுலமுண்டென்று தெளிவாகக் கூறப்பட்டிருப்பதே பிரமாணமாகும்.

இனி அக்கினிகுலத்தவர் அரசராயிருந்து உலகையாண்டாரென்பதற்குப் பிரமாணம்:— மகாபாரதம் ஆரண்யபர்வம் மார்க்கண்டேய சருக்கம் அக்கினியின் பரம்பரையைக் கூறுமிடத்தில் 4-வது சு—ள். தவன் என்னும் அக்கினி வமிசத்தரசனுக்கு புரந்தரன், உஸ்மா மனு, என்று மூன்று புத்திரரிருந்தனர் 5-வது சு—ள். அக்கினியின் புத்திரரான மனுவும் பிரஜைகளைப் பரிபாலனஞ் செய்தார். வேதத்தின் கரையைக் கண்ட பிராம்மணர்கள் சம்பு எனப்பட்ட அக்கினியினுடைய பிரதாபங்களைப் பேசத் தொடங்கினர் என்றும் தமிழ்ப் பாகவதம் 8-வது ஸ்கந்தம் 1-வது அத்தியாயம் "இயம்பிரண்டாஞ் சீர்மனுவினையுரைக்கிலங்குமக்கினிமுன மீன்ற, நயந்தருசுவாரோசிட னவனுலகநவையறக் காக்கு நாள். இ—ள் சொல்லப்பட்ட இரண்டாவது மனுவானவர் அக்கினி தேவன் முன்னொருகாலத்திற் பெற்ற சுவாரோசிடமனுவெனப்பட்டவராம் இவர் உலகைக் குற்றமறப் பாது காத்து

வருநாளிலே. என்றும் வில்லிபுத்தூராழ்வார் பாரதம் சபா பருவம் இராஜசூய யாகச் சருக்கத்தில் அக்கிர பூஜை செய்யவேண்டிய காலத்திலே 3-வது கவி "பருதியும் மதியும் வன்னியுமுதலாம்பல் வகைக் குலத்து முற்பவித்த, நரபதி குழாத்தில் யாவரே பெறுவார் நவிலுமுற்பூசைமற்றென்னக், கருதியவசுக்களெண்மரிலொருவன் கங்கையின் றிருமகன் தெய்வச், சுருதிமாமகஞ்செய் புனிதனை நோக்கித் தொன் முனிவரரையுநோக்கி. இ-ள் யாவருஞ் சிந்திக்கத்தக்க அஷ்ட வசுக்களிலொருவரும் கங்காதேவியின் அழகிய புதல்வரும் ஆகிய வீட்டுமரையும், தெய்வத்தன்மையுடைய வேதத்திற் கூறிய பெரிய யாகத்தினைச் செய்யும் பரிசுத்தமான முனிவரரையும், ஏனைய பழமையான முனிவரரையும் (தருமராசர்) பார்த்துச் சூரியன் சந்திரன் அக்கினி இந்தப் பலவிதமான குலங்களிலுமுதித்த அரசர் கூட்டங்களில் யாவர் முதற் பூஜை பெறுதற்குரியார் சொல்லுங்களென்று கேட்டார். என்றும் அப்போது வியாசர் கிருஷ்ணருக்குச் செய்யுங் களென்று சொன்னர். அதற்குச் சிசுபாலன் சொன்ன 15-வது கவி "சூரன் குலத்தோர் குபேரன் குலத்தோர் சுடர்ப் பாகவப், பேரன்குலத்தோர்கள் முதலோரிருந்தார்கள் பெயர் பெற்ற பேர், வீரங்கொலோ வாகுசாரங்கொலோ செல்வ மிச்சங்கொலோ, பூரம்புராசிப்புவிக்கென்று முதுவோர்கள் பொதுவோர்கொலோ" இ—ள். மிகுந்த கீர்த்தியைப் பெற்ற சூரியகுலத்தரசர்களும், சந்திரகுலத்தரசர்களும், பிரகாசம் பொருந்திய அக்கினிகுலத்தரசர்களும் ஆகிய பலபேரிருக்கச் சமுத்திரஞ் சூழ்ந்த இவ்வுலகத்தில் எக்காலத்திலும் பெரியவர்களாவார் இடையர்களா? இவர் பெருமையடைந்தது செளரியத்தினலா? புஜபலத்தினலா? அகண்டஐசுவரியத்தி

ஞலா ? என்றும் ; மகா கவியான கம்பரியற்றிய செம்பொற் சிலை யெழுபது 3-வது கவி—சிலையினிற்றிறங்கூர் வன்னியர் சிலையன்றிச் சிலை மற்றுண்டோ. என்றும் இருவாக்ஷிப்புலவ ரியற்றிய திருக்கைவளம் 1-வது வெண்பா—சீராரும் வன்னி குலச்செல்வர் முடிதரித்துப், பாராளச் செங்கோலைப் பற்றுங் கை. யென்றும் ; வன்னியரென்றால் அரசரென்று வெளிப் படையாக விளங்கும்படி கல்லாடம் 10-வது கவி—தருமப் பெரும்பயிரிலகுபெற விளைக்கு, நாற்படை வன்னியராக்கிய பெருமான். என்றும்; வாசிட்டம் ஐந்தவர்கதை 7-வது கவி— சிந்தைசெய்வார் நல்குரவுதீர வுயர்வன்னியராவோம். அந்த நிலைசற் ருதளிஞலதிகநிலை மன்னவராவோம். என்றும் ; கம்பராமாயணம் உத்தரகாண்டம் இலங்கையழித்த படலம் 11-வது கவி—கொடிமன்னுமாடக்குலமென்னு மயோத்தி யெய்திக், கடிமன்னுவாயிற் கடைநின்றருள்கால நோக்கிப், படிமன்னிவாழும்பல வன்னியர் மண்டலீகர், முடிமன்னரெல் லாமுறையேபுகுந்தேவல் கேட்க. என்றும் ; கூறியவைகளே வன்னியர்கள் க்ஷத்திரிய அரசர்களாய் இராஜ்ய பரிபாலனஞ் செய்தனரென்பதற்குப் பிரமாணமாகும்.

இந்த அக்கினி குலத்தரசர்கள் யாவரெனின் மலையா ளம், தமிழ், தெலுங்கு, இந்துஸ்தான், இந்தத் தேசங்களை அர சாண்ட சேரன், சோழன், பாண்டியன், பல்லவன், சளுக்கி யன் என்பவர்களாம். இதற்குப்பிரமாணம் ஆக்னேய புராணத் தில் 135-வது அத்தியாயத்தில் பரதகண்டத்தைக் குமரிலங் கையின் தென்கோடியிலருந்து பினுகி நதிவரையிலும் வகுத் துள்ள நாட்டை ஆக்னேயகண்டமெனவும், பினுகி நதியி னின்றும் விந்தியமலை வரையிலும் வகுத்துள்ள நாட்டை சௌரகண்டமெனவும், விந்தியமலையினின்றும் ஹிமா

சலம் வரையிலும் வகுத்துள்ள நாட்டை சௌமியகண்டமெனவும் பிரித்துக்கூறி, ஆக்னேய கண்டத்தில் அரசு செலுத்தியவர்களைக் கூறுமிடத்தில், சேர சோழ பாண்டியர் மூவரென்றும் அவர் அக்கினிவழி வந்தவரென்றுங் கூறப்பட்டிருக்கின்றது. இதனாலேயே அவராண்ட கண்டத்திற்கு ஆக்னேய கண்டமென்ற நாமமுண்டாயிற்று. வில்லிபுத்தூராழ்வார் பாரதம் ஆதி பருவம் திரௌபதை மாலையிட்டச்சருக்கத்திலே சுயம்வரமண்டபத்திலே வந்திருந்த அரசர்களைச் செவிலித்தாய் இவரின்னாரின்னாரென்று கூறிவருமிடத்திலே "இவன்சல்லியனென்றுரைசான்றவிகல்வேன் மன்னற்கேறனையா, னிவன்றன் பகைவர் யாவரையுமிமையோராக்கு மெழிநீல, னிவன்றண்டமிழ் தேரடல் வழுதியிவன் றேரிரவிகுலவளவ, னிவன் செந்தழலோன் மரபாகியீரேழுலகும்புகழ் சேரன். இ—ள். மிகுதியாகிய பலமுடைய வேலாயுதத்தைத் தாங்கிய அரசருக்குள் சிங்கம் போன்றவன் என்று சொல்லப்பட்ட இவ்வரசன், சல்லிய மகாராஜன். தனது சத்துருக்கள்யாவரையும் தேவர்களாகும்படிசெய்யும் இவ்வரசன், அழகிய நீலனெனப்பட்டவன். இவ்வரசன் குளிர்ச்சி பொருந்திய தமிழ்ப்பாஷையில் வல்லவனாகிய பலம் பொருந்திய பாண்டியன். இவ்வரசன், சிவந்த அக்கினியின் குலத்தவனாகிப்பதினான் குலகங்களிலுள்ளாரும் புகழும்படியான கீர்த்தியையுடைய சேரன். என்னு மிக்கவி சேரனை வெளிப்படையாக வன்னியனெனக்கூறிற்று. கருணாகரத்தொண்ட வன்னியனார் சதகம் 24-வது கவி. எறிக்கும் புகழ்க்கச்சியேகாம்பரச்சம் பெனுந்தமிழால், பொறிக்கும் புலிக்கொடியான் புகழ்பெற்ற புலமையெல்லாந், தரைக்கு மதனப்புறத்துந்தெரிந்திடு் தன்மைகண்டேன்

மறைக்குவாலோதுங் கருணாகரத் தொண்டவன்னியனே. என்னுமிக்கவி சோழனை வன்னியனாகக் கூறிற்று. கடிகை முத்துப்புலவரியற்றிய திக்கு விஜயத்தில் "பரவுவரகுண ராம பாண்டிய வன்னியன் புகழைப் பரிந்துகூற" என்பதும் "வேந்தன் வரகுணராம பாண்டிய வன்னியனுக்கே விஜயஞ் சொன்னேன்" என்பதும் பாண்டியனை வன்னியனாகக் கூறு கின்றன. அற்றேல் சோழன் சூரியகுலத்தானென்றும், பாண்டியன் சந்திரகுலத்தானென்றும் ஆன்றோர் சிற்சில விடங்களிற் கூறுகின்றனரே; அதற்கியாதுகதியெனின். மகாபாரதம் ஆதிபருவத்திலே காண்டவதகனச் சருக்கத்தி லே 231-வது அத்தியாயத்திலே மந்தபாலனென்னுமுனிவர் அக்கினி தேவரைத் துதிக்குமிடத்தில் "அக்கினி தேவனான தேவரீரே சூரியனும் சந்திரனும் வாயுவும் அஸ்வனி தேவ தைகளுமாகவிருக்கின்றீர்" என்றும் யயாதி சருக்கத்திலே சந்திரனுடைய உத்பத்தியைக் கூறுமிடத்தில் சந்திரன் பதி னறுகலைகளையுடையவனென்றும் அவற்றைத் தனது சிநே கிதனாகிய சூரியனுக்குக் கொடுத்து முறையே மீண்டும் பெறு வானென்றும், அவன் அத்திரியினுடைய கண்ணிலும் அழகிய அக்கினியிடத்திலும் உதித்தவனென்றுங் கூறப் பட்டிருப்பதினாலும், அக்கினியின் சூட்டையும் பிரகாசத் தையும் விட்டுச் சூரியன் வேறில்லாமையாலும், மூவேந்தருங் கலந்து விவாகாதிகளைச் செய்துகொண்டிருந்ததினாலும், சூரிய சந்திர குலத்தவரையும் அக்கினி குலத்தவ ரென்றுங் கூறலாம். என்பதாம். அங்ஙனமாகுக பல்லவர்களை அக்கினிகுலத் தரசர்களென்பது எப்படி யெனின்? அக்கினியின் புத்திரராகிய அங்கிரஸ் முனிவரது பரம்பரையிற் பிறந்த துரோண புத்திரரான அஸ்வத்தாமா

ஓர் காலத்தில் தனது தபோவனத்தில் வந்த மதனியென்னும் அழகிய ஓர் தேவகன்னிகையைக் கண்டு மன்மதாகாரராய்க் காமுற்று அக்கன்னிகையுடன் கலந்து ஓர் குழந்தையைப் பெற்றார். அத்தேவமாது அக்குழவியை விருக்ஷத்தின் இளந்தளிரான பல்லவத்தின் மீது வைத்துச் சென்றதால் அக்குழந்தைக்குப் பல்லவனென்னு நாம முண்டாயிற்று. இதற்குப் பிரமாணம், மகாபாரதம் அனுசாஸன பருவம் 85-வது அத்தியாயத்திலும், ஹல்ஸ் துரை எழுதிய இந்தியா சாசன புத்தகம் 1—வது வாலியம் 12—வது பக்கம் 24—வது நெம்பர் சாசனத்திலும், 26 வது பக்கம் 32-வது நெம்பர் சாசனத்திலும், தெளிவாய்க் காணலாம். மேலுமிவர் சோழ ரோடு கலந்து விவாகாதிகளைச் செய்து கொண்ட பின்னர் "பல்லவச்சோழர்" என்றும் "சம்புகுலப்பல்லவர்" என்றும் வழங்கப்பட்டார். இவர் பட்டப்பெயர் வர்மாவென்றும் "க்ஷத்திரிய சிம்மபல்லவேஸ்வர" மென்று மிருந்ததால் இவர் க்ஷத்திரிய அரசரென்று நன்கு விளங்குகின்றது. அங்ஙனமாகுக சளுக்கியர்களை அக்கினிகுலத் தரசரென்பது எப்படி எனின் உலகத்திலே தருமங்குறைந்து அதரும மதிகரித்த ஓர் காலத்தில் முனிவரர் உலகைக்காக்க ஓர் யாகத்தைச்செய்தனர் அதினின்றும் இந்திரன், பிரமதேவன், உருத்திரன், விஷ்ணு என்பவர்கள் முறையே பிரமாரா, சலூகன், புரியாரா, கோஹான் என்ற நான்கு வீரர்களாக உதித்தனர். இவருள் சலூகன் வமிசத்தவர்களே சளுக்கியரெனப் படுகின்றனர். இவர்களுக்கு "வேள் புலத்தரசர்" என்று நாம மாகும். இவரது பரம்பரையில் விக்கிரமாதித்தன் பிரதாப ருத்திரன் முதலிய அனேக வீரர்கள் பிறந்து உலகைப் பரிபாலித்தார்கள். இவர்கள் வமிசம் இப்போது ஹிந்துஸ்

தான் தேசமுழுவதும் பரவி யிருக்கின்றது. இராஜபுத்ர ஸ்தானமாகிய ராஜபுதனம் ராஷ்ற மஹேந்திரம் ராஜ பட்டாணு என்கின்ற இந்த ஸ்தானத்திலு மிருக்கின்றனர். மேலு மிவ்வைவர்களுக்கும் அக்கினியே மூலபுருஷ னென்பதற்கு; ஹரிவம்சத்திலே யயாதியின் புத்திரனுகிய துர்வசுவின் பரம் பரையில் வந்த வன்னியென்னு மரசன் வழியிலுதித்த ஆக்கி ரீடன் என்பவனுக்கு கேரளன், சோழன், பாண்டியன், கலிங் கன் என்னும் புத்திரருண்டாளுரென்றும் அவர்களது ராஜ் யங்கள் அவர்களது நாமத்தாலேயே வழங்கப்பட்டனவென் றுங் கூறப்பட்டிருக்கின்ற இடத்திலும், டாட்துரை வெளி யிட்ட இராஜஸ்தான் சரித்திரத்திலும், பிரமாணந்தெளிவா கக் காணலாம். மேலும் வல்லாள மகாராஜன் என்பவரும் அக்கினிகுல க்ஷத்திரியரான சேரராஜாவின் பரம்பரையில் வந்து சேரநாட்டிலே தொண்டை மண்டலத்திலே திரு வண்ணுமலை என்னுந் திவ்விய க்ஷேத்திரத்திலே அரசராக விருந்தவர். ஆகையால் இந்த ஐவர்களும் வன்னியகுல க்ஷத் திரியர்களாம். இஃதமையும்

ஆனல் இக்காலத்தில் பரதகண்ட முழுவதும் பரவி குடிமதிப்புத் தொகையில் அதிகமாய் நடையில் ஆசாரமில்லாமல் காணப்படுகின்ற பள்ளிகளுக்கும் மிகப் பரிசுத்தமாயும் வீரமுடையவராயும் விளங்குகின்ற வன்னிய குல க்ஷத்திரியர்களுக்கும் என்ன சம்பந்தம்? அவர்கள் வேறு இவர்கள் வேறு என்று ஒருவன் கேட்டால் அது இந்தப் பள்ளியர்களுக்கா இப்படிப்பட்ட உயர்வுண்டாயிருக்கின்றது என்ற பொருமையினுல் கேட்கப்பட்டதாகுமே யொழிய வேறில்லை. ஏனென்றுல் பள்ளியர்களைத் தவிர வன்னிய ரென்னும் மகுடம்புனைந்த பெயரையுடைய ஓர் ஜாதி இந்து

தேச முழுவதுங்கிடையாது. ஆசாரக்கேடெனினோ ? அனை வர்களுக்கும் உண்டாவது வழக்கமே யென்று வாசிட்டத்தில் விஸ்வாமித்திரருக்குத் தசரதரால் "காலவேற்றுமையா லெல்லாப் பொருள்களுங் கலங்கிவேறாம், மேலவர் இளைத் தோராவர்" என்றும் புசுண்டர் கதையில் வசிஷ்டருக்குப் புசுண்டரால் "மதுமறையோர் விரும்பசூத்திரரிகழ்ச்சி செய்தார்" என்றும் கூறப்பட்டிருக்கின்றன. ஆகையால் காலகதியால் உண்டாகும் பிரழ்ச்சியினுல் ஆசாரக்கேடுண்டானது. மேலும் பள்ளியென்னும் பெயர் வன்னியகுல க்ஷத்திரியருக்குப் பட்டப்பெயராக வழங்கினதே தவிர, ஜாதிப் பெயரன்று. இது பட்டப்பெயரென்பதைச் சாசனங்களில் "பள்ளிச்செல்வன் பழுவரையன்" என்பன முதலிய வசனங்களினுல் சோழ வேந்தரைச் சிறப்பிக்குமிடத்திலும், ஆப்ராட்டு, கெட்டில், நெல்சன், ரெவரெண்டுவில்லியம், டெய்லர், ரெவரெண்டு டிமாரீஸ், முதலிய துரைகள் எழுதிய இந்தியா தேசத்துச் சரித்திரங்களில் இந்த ஜாதியைப்பற்றி அபிப்பிராயங் கூறுமிடங்களிலும், காஞ்சிபல்லவராய கோபுரம் தற்போது பள்ளிகோபுரமென்று வழங்குவதும் "பல்லவரே இக்காலப் பள்ளிகள்" என்று மேற்படி த்துரைமார்கள் தாம் எழுதிய சரித்திரங்களில் புகழ்ந்து கூறுமிடத்திலும், சென்ஸஸ் சரித்திரங்களிலும், இதர்ஸ்டன் துரை எழுதிய "தென்னிந்தியாவின் ஜாதிகள்" என்னும் புத்தகத்தில் "பள்ளிகள் அல்லது வன்னியர்" என்று இச்சாதிக்கு மகுடங்கொடுத்திருக்குமிடத்திலும், தெளிவாகக் காணலாம். மேலும் இவைகட்கெல்லாம் மேற்பட்ட இக்கால அனுபவத்திலும் பள்ளியர்களே வன்னியரென்றழைக்கப்படுகின்றனர், ஆகை

யால் இப்பள்ளியர்களே வன்னியகுல க்ஷத்திரிய பரம்பரையில் வந்தவராவார்கள். மேலும் பள்ளியென்னும்பெயர் பட்டப்பெயரென்பதற்குச் சேரராஜ வமிசமாகிய மலையாளதேச ராஜாவின் பட்டத்து யானைக்குப் பள்ளியானை யென்றும் வாளாயுதத்திற்குப் பள்ளிவாள் என்றும் அரண்மனைவாசலுக்குப் பள்ளிவாசலென்றும் அரசகுடும்பத்தார் வீட்டிற்குப் பள்ளிவீடென்றும் வழங்கும் பிரயோகங்களினாலுங் காணலாம். பள்ளியென்னும் பதப்பொருள் தேவர் என்பதாம். “பா” என்னுந்தாது மூலமாய்ப் பரியென்ற வுபசர்க்கத்தோடுங் கூடி உலகைப் பரிபாலிப்பவர் என்னும் பொருள் தருவதுபோல், வன்னியகுல க்ஷத்திரியர்களுக்குப் பள்ளியென்ற பட்டப்பெயர் வந்தது. மற்றும்இதுபோல் காரணம் பற்றி இவர்களுக்குச் சேரனார், சோழனார், பாண்டியனார், வர்மா, வணங்காமுடியார், உடையார், நாயனார், கண்டர், சாமந்தர், பல்லவர், அஞ்சாதசிங்கம், கங்கணவுடையார், மழுவர், பொறையர், அரசுபள்ளி, இராஜா, இராயர், படையாக்ஷியார்,நாயகர் வாளண்டையார்,வீரமிண்டர்,வல்லமையுடையார், இராஜாளி, தந்திரியார், எட்டிகள்,துரைகள், பண்டாரத்தார், பூபதி, பரமேஸ்வர வன்னியனார், உருத்திரவன்னியனார், காளிங்கராயர், சம்புராயர், கச்சிராயர், பல்லவராயர், என்னும் பட்டப்பெயர்களுமுண்டு. இப்பட்டங்களையுடைய வன்னியர் சென்னை, காஞ்சி, வேலூர், மதுரை, கோயமுத்தூர், முதலிய அநேக இடங்களிலிருக்கின்றனர். இப்பட்டங்களை வன்னியரல்லாதாருஞ் சிலர் இப்போது வைத்துக்கொண்டுமிருக்கின்றனர்.

இவ்வன்னியர் பூர்வந்தொடங்கி இப்போதும் அரசர்களாக விருக்கின்றனர். அவர் யாரெனின் மலையாளத்தரசர்க

ளும் மற்றுஞ்சிலருமாம். அரியலூர் ஜமீன்தார் அவர்கள் திருவானைக்காவையாண்ட கோச் செங்கட் சோழராஜ வமிசத்தைச் சேர்ந்தவராவர். உடையார் பாளையஞ் சிற்றரசரவர்கள் காஞ்சிபுரத்தையாண்ட பல்லவராய சந்ததியாராவர். சிதம்பரத்திலுள்ள பித்தவரம் ஜமீன்தாரவர்கள் ஆதியில் சிதம்பரத்தைப் பொன்னம்பலமாக்கிய இரண்யவர்ம சோழன் சந்ததியாராவர், இவருக்கு இன்றைக்குப் பதினன்கு வருடங்களுக்கு முந்தித்தான் சிதம்பரத்தில் ஸ்ரீமந் நடேசப்பெருமானர் சந்நிதியில் பஞ்சாக்ஷரப்படியில் பரம்பரை வழக்கம் போல் தில்லைவாழந்தணர்களால்சங்காபிஷேகமும்ஆயிரங்கால் மண்டபத்தில் இரண்ய வர்மன் சந்ததியென்று வமிசாவளி படித்து பட்டாபிஷேகஞ்செய்து இரண்ய வர்மனுடைய கிரீடமுஞ்சூட்டி ஸ்ரீ நடேசப்பெருமானர் யானைகொடிகுடை முதலிய விருதுகளுடன் இவரை மாடவீதியில் வலம் வரச்செய்து இவர் தனது ஆஸ்தானமனுப்பி வைக்கப்பட்டார். சிவகிரி ஏழாயிரம்பண்ணை ஜமீன்தாரவர்கள் பாண்டிய ராஜன் சந்ததியில் தற்போதுள்ளவர். திருநெல்வேலி பன்னீராயிரம் பண்ணை சமீன்தாரவர்களும் சோழராஜ வமிசத்தவராகும். தெலுங்குநாடு விஜயநகர வேந்தர் சளுக்கியர் வமிசத்தவராவர். பரூர் ஊற்றங்கால் சமஸ்தானத்தவர்களும் பல்லவச் சோழவமிசத்தவராவர். ஆகையால் இவரனைவரும் இப்போது வன்னியகுல க்ஷத்திரிய அரசர்களாவார்கள். மற்றுமிவர்களின் மீது மகாகவிகளான கம்பர், இருவாக்ஷிப்புலவர், கடிகைமுத்துப்புலவர், ஜெயங்கொண்டார் இரட்டைப்புலவர், முதலாயினோர் பாடிய சிலையெழுபது, திருக்கைவளம், திக்குவிஜயம், சிவகிரிக்காதல் ,கலிங்கத்துப் பரணி, கருணைகரத்தொண்ட வன்னியனர் சதகம், முதலிய

நூல்களில் இவர்களையெல்லாம் வன்னியகுல க்ஷத்திரியர்களென்றே கூறியிருக்கின்றனர். ஆகையாலிக்காலத்தும் வன்னியகுல க்ஷத்திரியர் அரசராயிருக்கின்றனர்.

ஆனால் பரசுராமர் க்ஷத்திரியர்களை கலியுகத்தில் இல்லாமல் அழித்துவிட்டனர். ஆகலின் இக்காலத்தில் க்ஷத்திரிய பரம்பரையே முற்றிலும் இல்லையென்று சிலர் சொல்லுகின்றனர். இது அவர்கள் சுதந்திரமாய் நூல்களைக் கற்காமையினாலும், அசூயையினாலுங் கூறுவதாகும். ஏனென்றால்? பரசுராமர் கார்த்தவீர்யார்ஜ்ஜுனன் வமிசத்தாரிற் சிலரைமட்டும் அழித்தார்; ஏனையோரையன்று. பரசுராமர் ஸ்ரீராகவராலும் பீஷ்மராலும் அவமானிக்கப்பட்டார் என்பதினாலும், துவாபரயுகத்தின் முடிவில் நடந்த பாரத யுத்தத்திலும், ஜானகி பாஞ்சாலி முதலிய க்ஷத்திரிய மாதர்களின் சுயம்வரகாலத்திலும், அநேக க்ஷத்திரிய வீரர்கள் ஒருங்கே கூடினார்கள் என்பதினாலும், பராசரபகவான் அருளிய தனது ஸ்மிருதியில் கலியுகத்திற்கேற்றவாறு க்ஷத்திரிய தருமங் கூறப்பட்டிருப்பதினாலும், கலியுகத்தில் க்ஷத்திரியர்களில்லை யென்பது முற்றிலும் தவறாகுமன்றோ?

இவ்வன்னியர்களின் தொழில்.—வேதமோதுதலும், யாகஞ்செய்தலும், தானஞ்செய்தலும், உலகையாளுதலும், யுத்தம் பயிலுதலும், சேவகஞ்செய்தலுமாம். இக்காலத்தில் பெரும்பான்மையோர் உழுதொழிலை மேற்கொண்டிருத்தல் காலத்திற்கேற்ற தருமமாயினும் ஸ்வ தருமானுஷ்டானத்தையும் இயன்றவரையிலும் அனுஷ்டித்து வருதல் வேண்டும். குடிப்பெயர்கள். சேரம், சோழம், பாண்டியம் அல்லது ஆக்னேயம், சௌரம், சாந்திரம்

என்பனவாம். கோத்திரங்கள் :— ஆங்கீரசம், சம்பு, பாரத்வாஜம், ருத்திரவன்னியம், கோஹான், சாலுக்கியம், பிரமாரா, புரியாரா, என்பனவாம். சாகைகள் :—இருக்கு, சுக்லயஜுஸ், கிருஷ்ணயஜுஸ், சாமம், அதர்வணம் என்பவைகளுக்குரிய முறையே. 21, 15, 9, 1000, 21, சாகைகளுமாம். இவற்றில் முக்கியமாவன கிருஷ்ணயஜுஸுக்குரிய 9 சாகைகளாம். பிரவரம் :—மேற்சொன்ன குடிப்பெயர்களே பிரவரமாம். அன்றியும் குலசேகராழ்வார், சேரமான் பெருமான் முதலிய புகழுடையவர்களின் பெயராலுமுண்டு. சூத்திரங்கள் ;—ஆஸ்வலாயனம், கௌஷீதகம், காத்தியாயனம், போதாயனம், ஆபஸ்தம்பம், சத்தியாஷாடம், பாரத்வாசம் அக்நிவேஸ்யம் ஜைமினீயம், திராக்கியானம். கௌஷிகம், என்பனவாம். இவற்றுள் முக்கியமானது, போதாயன சூத்திரமாம். மதம் :—ஸ்மார்த்த மதமாம். சமயம் :— சைவம், வைஷ்ணவம், சௌரம், சாக்தேயம், காணுபத்தியம், பைரவம் என்பனவாம். இவ்வளவுமேன்மையையுடையவர்களாயிருக்கும் வன்னியர்களில் சிலர் தத்காலம் கேவலம் தாழ்ந்த நிலைமையிலிருக்கக் காரணமென்ன வென்றால்? முற்கூறப்பட்டுள்ள காரணத்தோடு மகாபாரதம் ஆரண்யபருவம் யுதிஷ்டிரருக்கு மார்க்கண்டேயர் கலியுக தருமத்தைக்கூறி வருமிடத்திலே "தென்றிசைக் கதிபராகிய மன்னர், தேசமெங்கு முழல்வார் நிலைகெட்டே" என்றும் கூறப்பட்டிருப்பதினால் கால வேற்றுமையே காரணமாகக் கூறக்கிடக்கின்றது. ஆயினும் கல்வி முதலிய நாகரீக முடையவர்களை மாத்திரங் கணக்கிட்டால் மற்றைய ஜாதிகளிலுள்ளவர்களை விட இவ்வன்னியர்களே எத்தனையோ பங்கு அதிகமாவார்கள். ஆனால் தமிழ் நாட்டிலும் சேரநாட்டில் மாத்திர முள்ளவரில் சிலர் ஆசார மின்றியவர்களாக விருக்கின்றனர்.

ஆகையாற்றான் கடவுட் சம்மதமாய்ச் சேரதேசத்திலே நடுநாட்டிலே திருவண்ணாமலையென்னுந் திவ்விய க்ஷேத்திரத்திலே வன்னியகுல க்ஷத்திரிய வல்லாளராஜன் மடாலயத்திலே அகில வன்னியகுல க்ஷத்திரிய மகா ஜனங்களால் "அகில வன்னியகுல குருபீடம்" ஒன்று கலியுகம் 5025-க்கு உருத்திரோத்காரிஞு ஐப்பிசிமீ 1உ புதன் கிழமை ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றது. அப்போது வன்னியகுலச் சட்டதிட்டப் புஸ்தகமும் ஒன்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் அனைத்து வன்னியரும் அந்தச் சட்டப் புத்தகப்படிக்கு அந்தக் குருபீடத்தில் ஐக்கியப்பட்டுக் கல்வி ஆசாரம் ஸ்வஜாதியபிமானம் முதலியவற்றால் முன்னிருந்த மேலான நிலைமையை யடையவேண்டுமென்றே மேற்சொன்ன குருபீடத்திலிருந்து இந்நூலும் வல்லாளராஜன் வரலாறும் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆகையால் சென்னை வன்னியகுல க்ஷத்திரிய மகாசங்க உத்தாரணகர் ஸ்ரீலஸ்ரீ கோபால நாயகர், வன்னிவம்சப் பிரகாசிகை முதலிய நூலாசிரியரும் க்ஷத்திரியன் என்ற பத்திரிகையின் ஆசிரியருமான சேலம் சுகவனபுரி ஸ்ரீலஸ்ரீ சு. அர்த்தநாரீசவர்மா, வன்னியகுல க்ஷத்திரியன் என்ற பத்திரிகையின் ஆசிரியரான சென்னை ஸ்ரீலஸ்ரீ. ஆ. சுப்ரமண்ணிய நாயகர் முதலிய பெரியோர்கள் குலநன்மையின் பொருட்டுச் செய்துவந்த, வருகின்ற, பெரும்முயர்ச்சியால் வன்னியர் அனைவரும் நன்மையை யடைந்து வருவதுபோல் இந்நூலினையும் பிரமாணமாய்க் கொண்டொழுகினால் சகல நன்மையும் பண்டுள்ள இராஜ்யசாம்ராஜ்யமுங் கிடைக்கப் பெற்றுப் பரமானந்த வாழ்வையுமெய்தலாம். சுபம்.
